தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1971 ஜுன் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Physically handicaped officers in Secretariat

* 6 *Q*.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any physically handicapped persons are holding appointment in Gazetted ranks in the Secretariat at present; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தலைமைச் செயலகத்தில், உடல் ஊனமுள்ள இருவர் இப்போது அரசிதழ் பதிவு பெற்ற (Gazetted) அலுவலர் பதவி வகித்து வருகின்றார்கள்.

ஓய்வு பெற்ற அரசு பணியாளர்களின் ஊதியம்.

* 7. வினா.—திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்களின் ஓய்வூதியம் குறித்து இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரைகள் ஏதேனும் வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சம்பள ஆணைக்குழுவின் கீழ்க்காணும் பரிவுரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(1) தற்போது ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கு உயர்ந்த அளவு 100 ரூபாய்க்கு உட்பட்டு, ஒரு மாத ஓய்வு ஊதியத்தை ஒரு மொத்த கருணைப் பூரிப்புத் தொகையாக (போனஸாக) ஒரு தவணை மட்டும் வழங்குதல்.